132\. சாறு வகைக் கோர் படி தானளிந்து விட்டு தயவான செங்கழு நீர்க் கிழங்கு தாளும்
வேறுபடா இரண்டு பலமரைத்துச் சேர்த்து விருக வடுப்பேத்திக் குறுக்கிக் காய்ச்சி
கருடைய திரிசாதி மதுர மேலம் கொத்த மல்லி திரிகடுகு அசமதாகம்
வீறுடைய சித்திரத்தை கூகைநீறு வெந்தயம் கச்சோலிரு சீரகமும் கூட்டே.

133\. கூட்டிடுவாயதி மதுரம் கெருட பச்சை கொட்ட மிவை வகைக்கு முக்களஞ்சதாக
மூட்டு வாய் ரவி தனிலே யுலத்தித் தூளாய் முன் காய்ந்த கஷாயமதில் தூவிக் கிண்டி
காட்டுவாய் வங்காளச் சீனி பலமாறு கலந்திறக்கிக் கிருத மதைக் கலசத்தூட்டி
மாட்டுவாய் நேரமொரு களஞ்சி வீதம் மண்டல மொன்று குதிதிடவே வகை தான் கேளே.

134\. வகையாவ கபை மேகம் வறட்சை தாக மாருத அத்தி சுரம் எழும்பருக்கி
தகையான ரெத்த பித்தம் ரெத்த குடு தொந்தித் த கிருணி வயிறெரிவு காந்தல்
பங்கயான உள் மாந்தை இருமலீளை பலதும் போமுடல் பருக்கும் வளர்த்தியாகும்
நங்கயானி தாளிச்சா பத்தியம் நன்குறு மின்று மொன்று நாட்டக் கேளே.

135\. நாட்டுவேன் நற் கதலிப் பழத்தின் சாறு நவிலின நீராவின் பால் பூசணிக்காய்
ஊட்டுவேன் கரும்புச் சாற் வகைக்கு நாளி ஒன்றுக்கி வங்காளச் சீனி பல மூன்று
காட்டுவேன் சீனக் கற்கண்டு நேராய் கரைத்தெரித்து பாகு செய்து கற்கங் கேளு
வாட்டுவேன் கசை நீறதி மதிரங் சீரம் வகை பலமென்றேன மரைப் பலமும் வாங்கே.

136\. வாங்குவாய் திரிகடுகு கெருடப் பச்சை மாயக்காய் கொத்தமல்லிய சமதாகம்
பாங்க தாம் திரிபலை காிய சீரம் பகர் விடையமிலவங்க மூலவாய் கோட்டம்
போங்க தாம் திரிசாதி கற்கடக சிங்கி புகழ் மேவுங் கசகசா அரத்தை கன்னூர்
சாங்கமாம் வகை வகைக்கு முக்களஞ்சி வீதம் தாலிடித்துச் சூரணித்துப் பாகில் தாவே.

<u>வாலைகள் நோய் எல்லாத்துக்கும் நெய்.</u>

137\. தாவியே நெய் நாழி சிறு தேன் பாதி நவளவே கிண்டி லேகியம் போலானால்
நீவியே கலசமதிலடைத்துக் கொண்டு நிலவாக மண்டமொன்றருந்துவீரால்
தாவியே அத்தி சுரம் வறட்சை மேகம் தாகமிளைப்பிருமல் தலைச் ~~சீனத்தில்~~ வாந்தி
மேவியே வெட்டை கண் புகைச்சல் பித்தம் விட்டகலு முடல் தெளியு மெய் சொன்னேனே.

138\. மெய்யாக இன்னுமொரு நெய் தான் கேளு விளம்புகிறேன் வாலைகள் தீர் நோய் கட்கெல்லாம்
கைப்பான் வேலிப் பருத்தி கீழ் காய் நெல்லி கருது சிறு புள்ளடி விஷ்ணு கிரந்தி
தைப்பான கொடுப்பை எழுத்தாணிப் பச்சை தக்காளி யழு குதிருத்தாளியோடு
பொய்யாத வல்லாரை கறப்பு வெள்ளை பூவங்குறுந்தி யானையடி பின்னுங் கேளே.

139\. பின்னுன நிலப்பனை சாறனை நன்னாரி பிரியமுள்ள புவிரி மாதளையின் பிஞ்சு
முன்னவே சொன்னதிந்த வகைகளெல்லாம் முறைமையுடன் வகைக்கு வோர் பிடியதாக
பொன்னுன காடி தெளித்திடித்து நன்குய் புளிந்து சாறெல்லாம் நெய்யதில் வீதந்தான்
மின்னுன யிரவுள்ளிச் சாறுமுக்கு விட்டதி லொன்றரைப் படி தேங்காயெண்ணை வீத்தே

140\. எண்ணைதான் பச்சையன்றி மற்றதாகா இது விட்டால் பசுவின் நெய்யதுவு மாகும்
வெண்ணை தனிலிடு சரக்கு மாஞ்சி கச்சோல் விடையம் பலா விருட்ச மதிரங் கோட்டம்
கண்ணதாம் தாளிச பத்திரி வெள்ளி கன்னூர் நாங்கணங் கிருமி கெருட பச்சை.
பண்ணதாம் கொத்தமல்லி சாத்திர பேதி பகருமிலவங்கம் வசம்போமந்தானே.

141. ஓமமுடன்த் திற்பிலி மாயக்காயுற்ற திரிசாதி யிரு சீரகந்தான்
சேசு சேமமுடனே வகைக்கோர் விராகன் ஆக்கி செவ்விள நீர் விட்டரைத்து கரைத்து வார்த்து
நேமமுடனருப்பேத்திப் பதமாய்க் காய்ந்து நிசமான மெழுகு பதத்திறுத்து வாங்கி
வானமுடன் காசிடை கெற்பிணி மொர் புள்ளை மதலை முதல் வாலை கட்கு வகை கண்டுட்டே.

142. ஊட்டவே அன்று விரிவாய்ப் புண்ஞேடு உற்ற கெந்த வாளியுள்ஞரோகத்தோடு
கட்டிடவே வயிற்றப் புள்களிச்சல் மூலம் கருப்பு நெத்தக் கழிச்சலிரை கடிகள் மாந்தம்
சுட்டிடவே வயிறு தல் கிருமி சாற்றில் சொரி சிரங்கு உசுஷ்ணம் வெப்பிருமலீளை
புட்டிடவே கபம் பிறங் கால் வீக்கம் காய்ச்சல் வறட்சை கணைபதினெட்டு வகையும் போமே.

வாலேந்திரத்துக்_ஞ்சும்.

143. தினம் பொருந்தும் வாலேந்திரந் தனக்கு கண்ணில் தீட்டிடவோர் மையது தான் செப்பக் கேளு
கனம் பொருந்து மயலதின் காருதிரம் வெள்ளைக் கலையூட்டி நிழலுலத்திக் காய்ந்த பின்பு
வனம் பொருந்து மதின் பித்திரலோடு வல்லாரைத் தேரண்டத் தாிசி அயந்து
மனம் பொர்ருந்தும் படி யரைத்து மூன்றுருட்டி வளமாக நிழலுலர்த்தித் திரியதாக்கே.

144. திரித்துருட்டி எடுதததனை விளக்கிற் போட்டு சிறப்பான ஏரண்டத் தெள்ளை வார்த்து
எரித்திடவே மைபற்ற வத்து வழித்து நச்சுய் எடுத்ததனைப் பசுவின் நெய்யில் குழைத்துச் சற்றே
கரித்திடு நேத்திரத்திலிடக் கண்ணில் தோஷம் கண் புகைச்சல் மாலைக் கண் மயக்குந் தீரும்
விரித்த கலைவதினுலே வாலைகட்கும் விழியில் வந்த வியாதி யெல்லாம் விட்டுப் போமே.

ஒருமை.

145. விட்டோடு மின்ன மொரு விவரங் கேளு விருது பெற்ற மையிது தான் விள்ளப் போகா
மட்டோடு மல்துத்தம் சீனக் காரம் வளர்பிறு ரேகணியும் வகை நேர் கூட்டி
வான் செறிய மூன் மருந்துடன் விட்டாட்டி வழித்ததனை வெண்சீலை வீரவாளி
நிரஞ்சனமாயிவை ரெண்டிவெர்ன்றிறாட்டி நிழலுலத்தித் திரித்தனைப் பசு நெய் வார்த்து
காள் சிறந்த விளக்கேத்தி எரித்து மேல் மை பற்ற வைத்து வழித்தெடுத்து பகருவேனே.

46. பகருகின்ற விலாங்குத் தோல் துரிசு ரன்டும் பதியாவின் நெய் விட்டு வறுத்து நன்றும்
பகருகின்ற கரியாக்கி யெடுத்தரைத்து புகுந்த மையுமிதோடே சேர்த்து
கருகின்ற பசுவின் நெய்யில் குழைந்து கண்ணிலிட்டு வரச் சிறியோர்கள் நயன மீது
கருகின்ற வாலேந்திரக் கலையால் வந்த ரோகமறு மின்ன மொன்று செப்புவேனே.

47. உரைப்பான வாலேந்திர மதுக்கோர் நெய்தான் உரைக்கிறேன் சிறு பீளை மணத்தக்காளி
அருள் பாயுந் திருத் தாளி தொட்டால் வாடி அருகு கரிசாலை நிலப்பனை சீதேவி
மருப்பால பிரமி வெழுத்தாளி மூலி வல்லாரை சிறு ஆடக்கால் பொன்னும் காணி
நிரப்பாக எடுத்துச சாற்படி காலிச்சீதம் நிற்றதில் நேர் பாதி நறு நெய்தான் சேரே.

48. சேர்த்தவுடன் சாதிக்காய் பத்திரி கிரும்பு திரிபாலை திரிகடுகு தேவதாரம்
வார்த்த தொரு கெருட பச்சை கன்னூர் கோட்டம் வசம்புவு வா யேல மதி

மதிரத்தி காரி

நேர்த்தி யுறம் வசுவாசி யிலவங்கம் பத்திரி தேமிரும் அஷுடனே அக்கிறவும்
பார்த்தியுடன் வகைக்கு வோர் களஞ்சி வீத் பொடித்து மூன் சாற் விட்டரைத்தக் கரைத்தி டாயே.

149. கரைத்த கலே யடுப் பேத்திப் பாமாய்க் காய்ச்சி கருத்தாக மெழுகு பதம் தனில் வடித்து
வடித்த மறப் பாலகர்க் கோர் கறண்டிவீதம் வரிசையாம் நாளொன்றிலிரு போஅட்ட
விரைத்த முாவாலேந்திரக் கலேயள் காய்ச்சல் மெற் வறட்சை நயனத்தில் வியாதியோடு
நரைத்த தொரு கலேயெல்லா மோடிப் போகும் நன்றாக யிந்த மொன்ற தி நவில்கின்றேனே.

வாலேந்திரக் கலேக்கு நெய்.

150. நவிலுகின் நெமியுத தாலின மொன்று நமால தெந்திப் பூ பருத்திப் பிஞ்சு
கவிழுகின்ற மாதளம் பிஞ்சத்திப் பிஞ்சு கதலிப் பிஞ்சோடு பொன்னுவரை வல்லாரை
குவிழுகின்ற ஆலிலை கொழுந்தச் சாறு குறையாமல் வகைக்குழக்கு வீதம் கூட்டி
திவிழுகின்ற சுது நெய்யோர் படிதான் கூட்டி சிதைவில்லா தளந்தொன்றுச் சேர்ப்பதாமே.

151. சேர்ப்பாய் நீ ஆவின் பால் படி தாலென்று சேகரமாய்க் கலந்த தனில் செப்பக்கேளு
தீரப்பா யதிமதிரும் கெருட பச்சை திரிசாதி மாயக்காய் சாத்திர பேதி
கூரப்பா வசுவாசி கிருஉதன் சாதி குருந்தநற்சீரம் பெருஞ் சீரகமும் கன்னுர்
நேரப்பா வகை வகைக்கோர் களஞ்சி வீதம் நோவின் பாலு வார்த்தரைத்திடாயே.

வாலேக்கும் நேத்திரக் கலேவாலேந்திரக் கலேக்கும்.

152. அரைத்த நல்லும் கலக்கி நெய்யதனில் வார்த்த அனல் மூட்டி மெழுகு பதமாயக் காய்ச்சி
நிரைத்த மோர் கலசமதில் வடித்திருத்த நித்தமிரு போதோர் காசு தாக்க
வரைத்த தோர் மாந்த மதிசி சுரமுள் காய்ச்சல் வாலக் கண் வாலேந்திரக் கலேயுந் தீரும்
சிரத்தையுட தேக நிறை மதி போலாகும் சிறப்பாக யிந்த மொன்ற செப்புவேனே.

153. செப்புவேன் குக்குடத்தினண்ட நீ தாளென்ற தீராத வாலேந்திரக் கலேதான் தீர
மப்பதாம் சதை கறுத்த கோழியொன்ற வயிற பிளந்திரைக் குடலும் நேரே வாங்கி
கைப்படா ஊட்டியறச் சுத்தி செய்து கன்னுடன் பித்தி ரவிவை கலேதொன்றுக
வெப்புற தடை பதியனெடு நன்னாரி வேர் சமன் மூன் வகையுடன் சேர்த்தரைப்பதாமே.

154. ஆம்பப்பா பச்சரிசி மாவோடொக்க அரைத் தடை யோரேழாகப் பிடித்துக் கொடு
தாமப்பா முருக்கிலேயில்பொதிந்து கட்டி சாற்றுகிறேன் பழம் பாசி குப்பை மே
ஓமப்பா குழி மீண்டான் தீற் காய் நெல்லி எழுத்தாணிப் பச்சை யதிரடப் வல்லா
சேமப்பா வெள்ளை கறப்புரண்டிளுடு சீதேவியோர் பிடி தான் தெரிந்து வாங்கே

155. வாங்கியதில் கோட்ட மதி விடையமோமம் மதிர மிருவேலி செஞ்சந்தனம் ராமிச
ஓங்கியதோர் கஸ்துரி மஞ்சள் தாளும் ஒரோன்றுக் கோர் பலமதாகத் தூக்கி
பாக்குடனே யிடித்தலேப் பாண்டத்திட்டு படி நான்கு நீர் விட்டு மடல் பொழியால் காண்டம்
தாங்கியதன் மீதிலடை வைத்து மூடி சந்து வாய் சீலே மண் செய்தடுப்பிலேத்தே.

156. அடுப்பேத்தித் தீ யெரித்தப் படியோர் முக்கால் லாக வற்றும் போது நெரிப்பலே மாற்றி
எடுப்பாய் நீ யோரடைதான் கொடுத்து மற்றதெல்லாந் தான் சமித்திடா தனத்திபோடு

156. தொடுப்பாகக் கொடுத்திட நேத்திர நோயோடு சுடர் வாலேந்திக் கலையுந் துலையும் பாரே.

வாலேந்திரம் முதலானதுக்கு முழுக எண்ணெய்.

157. பாரப்பா முழுதற்குத் தயிலமொன்று பாடுகிறேனத்தித் தோல் பலமோரைந்து
கூரப்பா யித்திவைந்து பலந்தான் பட்டை குமமாக அரிந்திடித்துப் பாண்டத்திட்டு
வாரப்பா நீர் குறக்கி விட்டுக் காய்ச்சி வற்ற வைத்து எட்டொன்றும் வடித்து வாங்கி
கூரப்பா கரிப்பான் சாறெண்ணெய் நாழி கலந்த தனில் சரக்கு வகை கழறுவேனே.

158. கழுவேனதி மதிரம் தேவதாரம் கார்கோல் சந்தனமிளகு கரியசீரம்
குணைவுதான் சடாமாஞ்சி நெல்லி முளி கோட்டம் நற்சீரக வகைக்கஞ்சதாக
விளவிலாதின நீர் விட்டரைத்து வார்த்து வெந்து வடித்திறுத்ததனை முழுகும் போது
முறலாய் முச்சுரமுஷ்ணம் வாலேந்திரம் முடல் வறட்சை கலைகள் பதினெட்டும் போமே.

அத்தி சுரத்துக்கு சந்தனாதி கிருதம்.

160. போமப்பா இன்னமொரு தச கிருதம் கேளு புகலுகிறேனத்தி சுரம் வெதுப்புக்கெல்லாம்
தாமப்பா சந்தனமும் பலஞ்சாறு தரித்திடித்துத ஆளாக்கி தண்ணீர் தாவி
வாமப்பா பாண்டமதில் விட்டுக் காய்ச்சி வற்ற வைத்து எட்டொன்றும் வடித்து வாங்கி
ஆமப்பா நெய் நாழி யிளநீர் நாழி அளந்து விட்டோர் கிரகமதிலாக்கிக் கொள்ளே.

161. அதிலேதான் கற்க வகை சொல்லக் கேளு அதிமதுரம் சாதிக்காய் பத்திரி கிராம்பு
விதி சேரும் வங்கமிரு வேலி கோட்டம் வெந்தய மாம்திரேறு ஏலமப்பா
மதியான நாகப்பூ தேவதாரம் வங்காளப் பச்சை வசுவாசிகச் சோல்
சதிர் மேவு கொத்தமல்லி கசை நிற தயவான முந்திரிகை பேரீந்துமாமே.

162. இந்தடனே செண்பகப்பூ கற்கடக சிங்கி இருசந்தம் சீரகம் ரண்டொடு நன்னாரி
சாந்த முறன் குறந் தொட்டி வேருங் கூட தவறாமல் வகைக்கு யிரு களஞ்சி வீதம்
பாந்தமுற யிடித்து வடி கட்டிப் பின்னும் பசுவின் பால் வார்த்தரைத்து நெய்யில் சேர்த்து
காந்தியுற வெந்து பதமான போது கலந்ததின் மேல் மருந்து வகை கழறுவேனே.

வல்லாரை நெய்.

163. மருந்தான நெல் பொரியோர் படியிரேறு வங்காளச் சீனியது பலமோர் மூன்று
குருந்தான் தேன் நாழி விட்டுக் கிண்டு குழம்பு போலானதின் பின்னிறக்கி வைத்து
விருந்தான நெல்லிக் காயளவு கொள்ள வெதுப்படனே அத்தி சுரம் வறட்சை மேகம்
பொருந்தாத அதிசாரக் கழியல் காச்சல் போய் விடுமே யிந்த முறை பொய்யாதென்னே.

164. பொய்யாது சொல்லுகிறேன் நெய்தானென்று பனித முறைவல்லாரையடா தோடை
பெய்யாது தூதுவிளை கண்டங்காரி செங்குனி மீண்டாள் கூவிளை தக்காளி
உய்யாது மாதளை நெத்துளசிச் சாறு ஓர் வகை கால் படி வீதமாகச் சேர்த்து
தய்யாது வெள்ளாட்டுப் பால்ரவள்ளிச் சாறேன்றுக் கரைப்பதாகணைந்து வாரே.

165. வார்த்ததிலே தேங்கெண்ணை பச்சையாக வாங்கு காராவின் நெய்யொன்றாரி வீதந்தான்
சேர்த்திலே அதிமதுரந் தேவதாரம் திற்பிலி நல் மிளகு சுக்கு கற்கடக சிங்கி
தீர்த்திலே மாயக்காய் கெருட பச்சை சீரகம் வால் மிளகேலம்சிறு நாகப்பூ
பார்த்ததிலே சாதிக்காய் பத்திரி கிராம்பு பஞ்சு கன்னூர் வெண் குந்திரிக்கமாமே.

166. உருக்கமுடன் வசுவாசியக் கிரு காரம் உரோதியாம் சித்தரத்தை சாத்திர பேதி
பெருக்கமுள்ள கிரிசாத்து கிருமி நாக்கும் பிசகாமல் வகைக்கு அரைக் களஞ்சி வீதம்
நெருக்கமுடனீரள வுள்ளிச் சாற்றுலாட்டி நேர்மையாய்க் கரைத்து நெய்யதனிற் சேர்த்து
சுருக்கமுடன் காய்ந்து பதம் மெழுகு தானால் ஊதை தனில் வடித்திறுத்துச் சொல்லுவேனே.

167. சொல்லுவேன் நெய்யொரு காசிடை வீதந்தான் சுகிர்தமுடன் பன்னிரண்டு நாள் தாலீய
மல்லுவேன் வறட்சி கணையுள்ளு ரோகம் வாய் நாற்றம் தொண்டைப் புண் கெந்தவாய
புல்லுவேன் காச்சலோடு கடுப்புச் சீதம் உதிரமின்ப்பிளை உள் மாந்தை விக்கல்
வெல்லுவேன் சிலேற்பனமுடன் சுரப்புச்கோவை வரைப்புடனுள் சுரமகலுமின்னங் கேளே.

168. இன்னுஞ் சேள் பழஞ் சுரம் வெப்பத்திக் காய்ச்சல் எப்பிளைப்பு முகம் வெளுப்ப மா மாந்தஞ் சாற்றில்
வன்னமுள்ள பால் மாந்தமுத மாந்தம் மயேந்திரக் கணை வாலை சந்திரக் கணையுந்த
பின்னமில்லாக் கழிச்சலோடு பொருமல் தாகம் பிரிந்த போமுடல் மெத்தப் புரிப் பாகும்
அல்லமென்ற பத்தியந்தான் பிசகிடாமல் அருந்தி வர நோய் பலவ மகனற போமே

இரை மாந்தத்துக்கு.

169. அகன்ற போமிரை மாந்தந் தீர வேண்டி அரைகிறே முதாதி நெய்தாரென்ற
பகன்றதோர முசுக்கிகீழ் காய் நெல்லி பொடுதலை கையான் பிரமி கொடுப்பை வீளி
முகன்ற தோர் பழம் பாசிபகத்தி தோடை முருங்கை முருக்கிலை வேலிப் பருத்தி தெற்றி
இகன்றதோர் ஆரை குமிழின்டான் சாறு இளநீர் தண்ணீர் வகைக்கொருழக்கதாமே.

170 உழக்குட்னே ஆவின் பால் பசு நெய் நாழி ஊற்றியதில் சாதிக்காய் கொத்தமல்லி
வழக்குமுள்ள திரிகடுகு மாஞ்சி கஸ்தூரி மாயக்கா யதிவிடையம் கெருட பச்சை
பழக்கமுள்ள அத்தி திற்பிலி வெண்சந்தம் பாக்கான கோட்ட மதிமதுரங்கச் சோல்
முழக்கமுள்ள சீரகமோர் களஞ்சி வீதம் முன்னியநீர் விட்டரைத்துக் கரைத்து வா.

171. கரைத்து வார்த்துடப்பேத்தி பதமாய்க் காய்ச்சி கலசமேல் வடித்துப் பின் பொடி தான் பின்னு
மரைத்த ரோசினை கலந்து வைத்துக கொண்டு மைந்தர்க்கோர் கரண்டியள வந்தி சந்தி
உரைத்தமே பன்னிரெண்டு நாள் நாளூட்ட உடம்புலர்தல் நெஞ்சுலர்தல் பிடறிக் காய்ச்சல்
விரைந்துமே அத்தி சுரக் கழிச்சல் கெத்த வெதுப்பகலும் வாலையுடல் விளங்குந்தாலே

மாத்திரை.

172. மெலிவான மாத்திரை தானென்ற கேசு வெட்டி வேரதிமதிர முதைதக் காசு
நலிவான செண்பகப்பு சாத்திர பேதி ராயிச்சம் திற்பிலி நன்னாரி வேலம்
மலிவான தந்தன முந்திரி பேரீந்து மகிழம்பூ ரோகனி வங்காளப் பச்சை
திலிவான யிலவங்கம் கரிய சீரம் திரிசாதி சீரகமோர் களஞ்சதாமே.

குளிகை.

173. தாமென்ற மருந்தெல்லாம் கல்வத்திட்டு தானரைப்பா யிஞ்சி கையான் தகரைச் சாற்றில்
தேமென்ற குளிகை குன்றிப் பிரமாணந்தான் திரட்டி நிழலுலர்த்தி யோருண்டை வீதம்
வாமென்ற முலைப் பால் வெள்ளீரிலூட்ட வாராத மாந்த சுபம் தோஷம் வாந்தி
நாமென்ற கணபிருமல் கழிச்சலெச்சல் நணுகாது பல பிணிக்கு நன்மந்தானே.

174. நன்னமுடன் இன்னுமொன்று சொல்லக் கேளு நற்கொழிஞ்சி வேர் கோரோசினை வெண் முத்தம்
தனிகமுறு கடுகு ரோகணி வெண்காரம் சமனிறை சேர்த்த கத்தியிலைச் சாற்றுலாட்டி
தெனின முறும் பயற்றளவாய்த் திரட்டி யுண்டை நிழலிலுலத்தி முலைப் பால் வெள்ளீரிலூட்ட
வனித முற கணைமாந்தம் பொருமல் தாகம் வயிற்றுளை வங்கணு காது மாறிப் போமே.

காதில் சீழ் பாய்ச்சலுக்கு.

175. மாறுகின்ற விரோசினை மாத்திரை தானென்ற வமுத்துகிறேம் வெள்ளைக் காக்கலம் வேர்ப்பட்டை
சிறுகின்ற கடுகுரோகணி சீவந்தி சிலதை சாதிர்ப்பிலி நன்னிலுங் கட்
மீறுகின்ற வகை சமன் தண்ணீர் விட்டாட்டி மிகளவாய்த் திரட்டி நிழுலர்த்திக் கொண்டு
ஆறுகின்றதோர் குண்டை குளிர்ந்ததண்ணீர் அதிற் புகட்ட விரோசன மாகுந்தனே.

176. தாமென்ற காதில் புண் சீ ஜலந் தீர சாற்றுகிறேன் காக்தொட்டிச் சாறு படி மரைக் கால்
ஆமென்ற நல்லெண்ணெ சமன் மஞ்சாடி யளவுரவின் சேர்த்தெரித்து வடித்திறுத்தக் கரி காதில்
பானென்ற வண்ணெதனை யடைத்த மீதே பஞ்சி வைக்கச் சீ வடிதல் சலமுந தீரும்
வானென்ற செவி ரெண்டும தொளியுண்டாகும் வாகடந் தான் நீடுழி வாழ்க மற்றே.

முற்றும்-ஆண்டவர் துணை.

* மேல் வரும் நூலின் முதல் 3 ஏடுகள் இல்லை.

18. சுத்தியே குடல் வலித்து சுருட்டி மேலிருத்து வாங்கும்
தெத்திடு மிருகா லோயும் திருந்திடாத சவை குன்றும் கத்தவம் போலே சத்தம்
கதறிடும் பாலன் றனே.

19. ## என்னை.

முதியார் கூந்தல் முடக் கொத்தான் முகக் கறச் சாறனை வத வேலியும்
பதியும் குப்பை மேனி வகை பலயிரண்டு தான் சதைத்து
குதியும் பாலி குறுனியதில் முறகக் கரைத்து நாலொன்றாய்
விதியின் படியே வடி கட்டி மிக்க தேங்காயது ரெண்டே.

20. இரண்டு தேங்காய் தான் திருவி. இரத்த கஷாயந் தனில் பிழிந்து கண்டே
ரண்ட மெண்ணை படி களச்சிப் பருப்புத் திரி கடுகு
பண்டல சுமைய மோதம் பகரும் வகைக்கு விராகனைந்து
கொண்டே காய்ச்சி பதம் வடித்து குறிய கரண்டி யளவகமே.

21. மூன்று நாள் சந்தி முறையுடன் பாலர்க் கூட்ட
கன்றமே விரைவில் வாதம் கொழித்திடு மண்ட வாதம்
தோன்று மானந்த வாய்வு சுருக்குடன வீக்கந் தானும்
இன்றமே விதனந் தீரும் இம்முறையுரைத்தால் மேலோர்.

உளக்கல் வாதத்தின் குணம்.

22. உரைத்திடுங் கையுங் காலு முறப் பெல்லாந் தளர்ந்து காட்டி,
நிரையுறு கழுத்துங் கோணலும் நீர் மலஞ் சிறுத்துக் கொள்ளும்
தரைத்திடுஞ் சீதளாகவ தவள் முலை விருப்பமில்லை
அரைத்திடும் பாவை போலே அடங்கறு முளக்கலாமே.

2 ## இதுக்கு நெய்.

23. ஆவின் நெய்யும் நிம்பெண்ணை ஆமணக் கெண்ணை நல்லெண்ணை
மேவுந் தேங்கா யெண்ணையுடன் மிக்க வகைக்கு ஒருழக்காய்
தாவுங் கொடுவேலி சித்த முட்டி தழுதாழையும் நன்னாரி
கவு மிசங்கு நறுந்தாளி கோரங் கிழங்கு பலம் பத்தே.

24 பலந்தானென்றுக் கிருபடி நீர் பரிவா யெட்டொன்று யிறுத்து
குலமார்ந் கந்கஞ் சீனப்பா. குக்கில் வெந்நழுக்கடுகு
பிலமாந் தேக்கு வசம் பித்த பிஞ்சுங் கூட்டிச் சவிறுயல்
இலங்கு மஞ்சள் கருஞ் சூரை இதுகள் வகைக்குக் களஞ்செரண்டே.

25. ஒன்றுயிடித்தும பொடியாக்கி உகந்த கஷாயம் விட்டரைத்து
நன்றாய் எண்ணெ தனில் கலந்து நாளோர் மூன்று வன்னி யிட்டு
சென்றால் கடுகு பதம் வடித்துச் சிறிய கரண்டி யளவாக
அன்றுமல் தான் நாள் மூன்று அம நேரந் தானுள் கொள்ளே.

26. உள்ளே கொண்டு மேல் பூசி யுத்த மெட்டிக் கிருந்திட்டு
மெள்ளக் காய்ச்சி வேறு விருமேவும் பத்திய மன்னைக்கு
தள்ளத் திருக்கப் பிள்ளைக்கும் தயவால் வார்த்து வருவீரால்
கள்ள வுளக்கல் வாதமது கற்ம நிவிர்த்தியால் போமே.

பொருத்து வாதக் குணம்.

27. அவயவம் பொருத்து தோறும் அதிக நீர்க் கட்டு முண்டாகும்
கவயவம் போலே நின்று காச்சலும் திகமுண்டாம்,
இவநய மிருதியாகி மிசை வெல்லா மீளகி நிற்கும்

28. தளர்ந்திடு முடமுண்டாகும் தந்தை தாய் செய்த தோஷமும்
அளவிறிருங் கெற்பத்தான மருக்கினில் வந்த பாவம்
வளவிறிடும் பஞ்ச பூதம் வருந்தெச வாய்விலேசி
இளவிறிடு மருந்தேறுஞ இறையவனருளிச் செய்தார்.

<u>மேல் மூச்சு வாதக் குணம்.</u>

29. வருந்திய பாலர் மெய்யில் வசங் கெடுங் கையுங் காலும்
திரும்பியே யசைவறுற தேகமுங் குளிர்ச்சியாகி
விரும்பியே விசை தளரும் விறைத்திடுங் கழுத்துங் கோணும்
நிரம்பிய சத்தி குன்றும் நிலை தளர்ந்தவிடாதே.

<u>எண்ணெ.</u>

30. ஊணவே நிம்ப எண்ணெ உரியதை அளந்து விட்டு
வேணுமே மரக் கொடிகாள் வெற்றிலைச் சாறுரிதால்
தோணவே பழுக்காய் பாக்கு தோல்களைந்தொரு பலத்தை
நாணவே சாற்றை விட்டு நலம் பெற வரைத்திடாயே.

31. அரைத்து நீர் கரைத்துக் காய்ச்சி அன்புடன் வடித்துக் கொண்டு
சிரத்தனில் கரத்தை வைத்து சிவனருள் மனந்திலுன்னி
உரைத்திடக் காக வீதம் உள் கொடுமேலும் பூசு
துரைத்திடும் பாலர் வாதம் துகளுமேல் மூச்சும் போமே.

<u>அதிசார வாதக் குணம்.</u>

32. வசம் கெடும் கையும் காலும் வளைந்தது குளைந்து போகும்
கசங்கியே வயிறெரிந்து கழிச்சலும் பொருமலாகி
விசம் பெறம் குளிர்ச்சி யுண்டாம். விக்கலு மவிய நட்டும்
மசங்கியே போதக் கெடா மதிசார வாதமென்னே

<u>இதுக்குத் திரி தயிலம்.</u>

33. என்னவே சாதிலிங்கம் இதுதவுந் திரியிலாட்டி
நன்னவே நிம்ப எண்ணெ நறு நெய்யுஞ் சமனதாக
வன்னமா செரித்து வாங்கி வயதை வதிந்த தாக்க
அன்னவே சிறு தேறேடு வதிசார வாதம் போமே.

<u>வாம் எட்டுக்கும் தயிலம்.</u>

34. பாலகர் வாத மெட்டும் பறந்திடத் தயில மொன்று சாலவே
சாலவே சென்ன கரை தருப்பட்டை பலமு நான்கு
ஏலவே குணி நீரில் யிடித்ததை யிட்டுக் காய்ச்சி நாலிரண்டான போத
நலமுடனிறுத்த வாங்கே.

35. இரத்த நிம்பெண்ணெ நாழியிகிய தோர் பசுவின் பாலும்
மரத்தச சமனுய்க் கொண்டு வசம் பொரு பலந்தான் வாங்கி
குறித்திடுங் கஉநரயத் தாட்டிக் குளம்பவே கலக்கிக் காய்ச்சி
பிறத்ததை யரைத்து நன்றாய் சிறுவர் மேல் பூசு பூசே.

36. பூசிடும் பாலகர் மேல் பொருந்திய வாத மெட்டும்
பேசிடா தொடுங் கண்டாய் பிறப்பினில் வாத தோஷம்
வாசக மறிந்து நல்ல வையக மெல்லாங் கண்டு
நாயகனுமைக்குச் சொன்னார், நானிலமறியத் தானே.

<u>களிம்பு.</u>

... ... பித்தி மவிக் கொமந்த

கருநீர் வெல்லஞ் சாராயம் கரி பொரி மிளகு சந்தனமும்
வளநீரஞ்சு பலகாரம் மாவாழைகுலை மாப்பிள்ளை
குளநீரருகில் கருஞ் சாவல் குட்ட தட்டும் கோத்திரியே.

38. திரியும் பச்சை யரிசியுடன் தேங்காயண்டந் திரிசு வடாய்
நெரியச் செய்யுங் கிரிகைபது நெடு நாள் வந்த பிணி தீரும்
தெரியுமேழைக் கன்னியிடு தேவி பாதந் திருவடி செய்
அரிய பிணியுந் தான் தீரும் ஆயுர் வேதம் அருளுவதாம்.

39. அகனிடும் பல ஞ லாராய்ந்து அவுஷதம் செய்யலாகும்
பொருள் நிலையறிந்து நல்ல போசனத்தியல்வுங் கண்டு
மருவிய தேகங் கண்டு மருந்துகளீ விடுமுந் தீர்த்து
ஒரு வருள் மனத்தில் வைத்துக் கொடுத்திடில் பிணி யொன்றில்லை.

40. இயம்பிய பாலர் வாதம் எட்டதின் குணமும் சொல்லி வசம் பெறச்
சாத்திய மசாத்திய மருந்துடன் செய் பாகங்கள்
தசங்கவே தர்ம கர்மம் தசமுடன் விரிவதாக வசம் பெறச் சொன்னேம்
பாலர் வாத நூல் முற்றுந் தானே.

முண்டவர் குலை-அகத்தீசர் திருவடிகளே சரணம்.

. . . .

வாதமெட்டுக்கு நிதானம்.

1. சீரணி முருகன் பாதம் திருவடி தொழுது கொண்டு
வாரணி முலையாள் பெற்ற பாலகர் வாத மெட்டும்
ஆரணி சாத்திய மசாத்தியம் அவுஷதம் செய்பாகங்கள்
காரணமாகத்தானே கமுறின நூலில் சொல்வாம்.

2. சொல்லிய பாலன் வாதந் தொடர்ந்திடும் விவரந் தானும்
மெல்லியர் கருவில் வந்து விரும்பிய திசை வாயக்கள்
நல்லியல் வில்லாமல் தான் நாதமுஞ் சேருமாகில்
தல்லியே குவைமிட்டு தளர்ந்திடும் நரம்பு தானே.

3. தந்தையுந் தாயுங் கூடித் தழுவியே புணரும் நாளில்
வந்த முன் செய்த தோஷம் சரத்தினா அது மருவிய கெற்பிக் கட்டில்
விந்தையாய்ச் சரத்தினூடே வெங்குழலோடம் போல
அந்தாலாருப்பைத் தொட்டு மடர்ந்திடு மென்ன லாமே.

4. ரூமென்ற சுரத்தின் வாத மக்கினி வாதத்தோடே
ஒமென்ற மூல வாத முணக்கிய வாதந் தானும்
காமென்ற வதிசார வாதம் பொருந்து வாதத் தோடெட்டே.

5. எட்டு வாதங்கள் தன்னில் இசைவுறு சாத்திய மசாத்தியம்
இட்டமாத்து சுரத்தின் வாத மிசைந்த வக்கினியின் வாதம் வி
விட்டிடு மூல வாதம் விதையில் வாதங்கள் நாலும் நீ
திட்டமாத் தீருஞ் சாத்தியம் தீராது உணக்கல் வாதம்.

6. வாதமே பொருந்த வாதம் வருகு மேல் சுச்சு சுச்சு வாதம்
சீதமே யதிசாரத்தின் செப்பிய வாதம் நாலும்
கோதறத் தீர்ந்திடாது கொடும் பிணி சாத்தியமாகும்
தீதறப் பொதிகை வாழும் திருமுனி யருளிச் செய்தார்.

சுர வாதக்குணம்.

7. குத்திடு மங்க மெல்லாம் கொடிய சுரம் கோபமாகி
சுத்திடு மதரத் தன்னி லமுந்து மேல் வாந்தியுண்டாம்
இத்தனை மலமிடாது இருப்பொரு பாகந் தன்னில்
வத்திய பாலர் மெய்யில் வருஞ் சுர வாதங் காணே.

என்னெய்.

8. காணவே நிம்பப் பட்டை கடராதி மிளங்கன் வேரும்
பூணவே திரிகடுகு புங்கம் வேராயில்லியத்தோல் காண்
காணவே தழுதாழை வேர் கருஞ் சூரை கருவிலாஞ் சு
நாணவே சிற்று முட்டி நவின் வகை பலங்களாமே.

9. பலமது தனக்கு ரண்டு படியது குறையாமல் தான்
செலமது அளந்து விட்டு சேரவே எட்டொன்றுக்கி
நலமுற நிம்ப வெண்ணை நல்ல யெரண்டத் தென்னை கலமதிலுரி
வீதந் தான் கனலி வெள்ளறுகு மஞ்சள்.

10. மஞ்சள் சித்தரத்தை காயம் வசம்பு வெள்ளுள்ளி சீரம்
உஞ்சு வால் மிளகு வெந்தயம் மூந்தொரு கஞ்சி வீதம்
மிஞ்சவே கலந்து காய்ச்சி மெழுகு பதம் வடித்துக் கொண்டு
அஞ்சவோர் கறண்டி வீதம் அருந்தி யேத வாலை போடே.

11. போட்டிடு முருகு வெள்ளீர் புத்தியாய்ப் பத்தியத்தை
நீட்டியே பார்க்கும் போது நில்லாது சுரத்தின் வாதம்
காட்டிடும் வேத நீரில் காஞ்சிரம இலையைச் சேரு
ஓட்டிடும் ஒன்றை விட்டு ஒன்று நாளாகலாமே.

அக்கினி வாதத்திற் குணம்.

12. எரித்திடும் தேகமெல்லா மிருமலுஞ் செருமலுண்டாம்
பொருத்திடும சிரக்குண்டாகும் பேய் முளி முளிக்கும் பின்னி
அரித்திடு முடங்கும் கை காலுளை ளை பாலுண்ணமாட்டா
தரித்திடு மெரிப்புண்டாகும் சிலர்ந் போல் சத்தமாமே.

என்னை:

13. சத்தான தோடையிலை நிம்பப் பட்டை சதாவேலி கிழங்கு நிலத்தாலங்கையாள்
முத்தான வெள்ளறுகு சீந்தித் தண்டு முசுக்கிலை கருவிளியம்மான் பச்சை 1
சித்தான நறுங்கரந்தைச் சாறு நாழி சிற்றே ரண்டெண்ணை யுரி நெய்யுழக்கு
வித்தான தேங்கெண்ணை நிம் பெண்ணை வீதமரைப்படி பரைக்கால் விரும்பிச் சேரே.

14. விருப்பமுள்ள திரிகடுகு திரிபலாதி வெந்தயங்கச் சோல மிரு சீரஞ் சந்தம்
திருப்பமுள்ள அரிசரத்த வங்க மேலம் சிங்கி வால் மிளகு திற்சாதி மஞ்சள்
ஒப்பமுள்ள வகைகளிஞ்சிச் சாந்துலாட்டி உத்தமனே எண்ணெயிலே கலந்து காய்ச்சி
அப்பமுள்ள மெழுகு பதமிறக்கி முழுக் வக்கினியின் வாதமது வகன்று போமே.

15.

மூல வாதக் குணம்.

மருமலர்க் குழலினளே வமந்தர் மேல் திமிர் புண்டாகிப்
பொருமல மல்மிடாது புக்கிடு மங்கந் தன்னில்
செருமலும் வேர்வையாகுச் சேரவே குறைந்து காட்டும்
வெருவியே எட்டாம் நாளில் விட்டிடும் காலில் சேரும்.

16. காலது நன்டிமுந்தாய் கருதியே முடக்க முண்டாம்
ஞாலமுங் குறைந்து வாடும் தவள் மூலை விருப்பமில்லை

மாலவே முகமுங் கண்ணும் மஞ்சள் போல் மிகவுந் தோன்றிச்
சாலவே மூல வாதம் தனையர் மேல் சேர்ந்த வாறே.

21.9.62.

கஷாயம்.

17. திரிகடுகரிசி யாற சீரகங் கெருட பச்சை வருதலை

சுருளி வேரும் மாயக் காய் கருவிலாஞ்சி
பெரிய வெள்ளறுகு மேனி பேனியே கஷாய மிட்டு
சிறியவர் தனக்கு ஊட்டத் தீர்ந்திடு மூல வாதம்.

விதை வாதத்தின் குணம்.

வித்தொரு பாலில் தோன்றி வீக்கமும் குத்துண்டாகி

(மேல் தொடர்வில்லை)

சுர நிதானம்.

1. ஆகாது பாலருக்குச் சுரங்களேது அப்பனே எட்டு வகை அதிகமில்லை
வாகாத பால்ச் சுரமும் மந்த சுரந் தானும் வளருகின்ற அனல் சுரமும் கபசுரமோடு
திகாத தாப சுர தோஷந் தானும் புகழுகின்ற ரெத்த சுரம் கணைச் சுரந்தான்
தாகாத பிள்ளை சுரம் வருவதேது தாய் புசிக்கும் மன்னத்தின் புளிப்புத் தானே.

பாலச் சுரத்தின் குணம்.

2. தானை பால் சுரத்தின் குணமே தென்னுல் தாய் கையில் தங்காது சத்தமுண்டாம்
மானை பனி சுதறியடிக்கும் பாரு மைந்தலே சிலிர்ப்பரிச்சுக் காச்சலுண்டாம்
தேனை தேகமது வாடிக் காணும் சிறப்பாக வாய் வெளுக்கும் கண்ணீர் பாயும்
கோனை மலம் சிக்கிச் சுழியாய் விழும் கொற்றவனே யிந் நோய்க்கு கஷாயம் கேளோ

கஷாயம்.

3. கேளப்பா சீரகம் திற்பிலி சிறும்பு கொடியாள அதிமதுரம் நறுக்கு மூலம்
நாளப்பா சித்தரத்தை முத்தக் காசு நலமான கடுகு ரோகணியும்
ஆளப்பா கஷாய மிட்டு மூன்று நாளும் அருந்தி விடப் பால் சுரங்கள் மாறிப் போகும்
பாளப்பா போகாது பிள்ளை நாலைப் பரிவாக ஆராய்ந்து மருந்து செய்யே.

மாந்த சுரத்தின் குணம்.

4. செய்யவே மாந்த சுரம் வருமேயாகில் சியலாகப் பனியத்தும் வயிறு முதம்
நையவே மலசலங்கள் பிடித்துக் கொள்ளும் நாள் பட்டால் வீக்க முண்டாம் வெளுக்கும் தேகம்
பய்யவே விட்டு விட்டுப் பனியுண்டாகும் பாங்கான சீதம் வரும் சலம் வேண்டாம்
ஐய்யவே யிந்நோய்க்குக் கஷாயம் சொல்வேன் சிறுவருக்கு உச்சரித்துக கொடுத்திடாயே

கஷாயம்.

5. கொடுத்திடவே பேய்ப் பீர்க்குச் சீந்தித் தண்டு கொழுஞ்சி வேர் கரத்த சுண்டைத் தகைப் பூவும்
அருந்திடவே கடுக்காயும் சுக்கு ஏலம் அப்பனே ரோகணியும் சிவதை கோட்டம்
பகுந்திடவே வெள்ளுள்ளி நறுக்கு மூலம் பாங்காகச் சரி கூட்டிக் கஷாயம் செய்து
எடுத்திடவே கொடுத்து விடு மூன்று நாளும் என்ன சொல்வேன் மாந்த சுரம் தாவிப் போமே

அனல் சுரக் குணம்.

6. போமென்ற அனல் சுரத்தின் குணமேதென்னுல் பொல்லாத களிச்சலது அனல் போலே மீறும்
நாமென்ற காச்சல் வெக்கை வாய்ப் புண்ணும் நாயகனே கபமுண்டார் நீர் சுருக்கிடும்
அல்லன்றி [illegible] விழும் அப்பனே மலந்துவாரம் [illegible]

தாமென்ற இவ்ரேக்குக் கஷாயம் சொல்வேன் சத்தியமாய்ப் பாலருக்குத் தயவாய்த் தானே.

கஷாயம்.

7. தயவான நற நன்றி கொளிஞ்சி வேரும் நாட்டிகமாய்ப் படர் தாளிக் கிழங்கிரேடு
மயமான செங்கழு நீர்க் கிழங்கு தானும் மைந்தனே அதிமதுரம் தேவதாரம்
கயமான சுருள்ளி சீரகங்களிரண்டும் கடுகரோகணியிஞ்சி கூட்டு வாங்கி
நயமான வகை சரியாய்க் கஷாயம் செய்து நாயகனே கொடுத்து விடு நலமுண்டாமே.

கப சுரக் குணம்.

8. உண்டாவ கப சுரத்தின் குணத்தைக் கேளு ஒருக் காலு மாறாமல் பனி யுண்டாகும்
கண்டாயோ கபமேறியுதரத்துக் கொள்ளும் கண் சிவக்கும் சத்தியுண்டாம் கருகும் தேகம்
அண்டாது தட்டிட்டு அடைக்கும் கவ்வம் அப்பனே சீதம் வரும் சன்னியுண்டாம்
தெண்டாத கப சுரமே கடினமாகும் சிறப்பாக மித்நோய்க்குந் நயிலம் கேளே.

குதலம்.

9. கேளப்பா நிம்ப நெய் அரையும் வாங்கி கிருபையுடன் இஞ்சிச் சார் வெள்ளுள்ளிச் சாம்
நாளப்பா முருங்கையுட பட்டைச் சாறு நலமாகப் படியரைக்கால் கூடச் சேர்த்து
நாளப்பா கடை மருந்து விரிசந்தார்ரம் பாங்கான திற்பிலியுஞ் சுக்கிரேடு
வாளப்பா சாரமுடன் அதிதாரந்தான் வசம்புடனே சிறும்புள்ளி கடுகு ரோகணி.

10. உள்ளியுடன் கன்னரம் காட்டுச சீரம் உற்ற வடிக களஞ்சரையா யிடித்துச சேர்த்து
தள்ளி விடு பிசிறு முட்டை பூ நாகந்தான் தயவான அண்டத்தோடு சுட்ட கரி தானும்
அள்ளியிடு வடக் கயிறு சுட்ட கரி கூட்டி அப்பனே மயிலிறகு சுட்ட கரி தானும்
நள்ளி விடு மணல் பருவம் வடித்து வாங்கி நன்றுகப் பாலருக்குக் கொடுத்துப் பாரே.

தாப சுரம்.

11. பாரே நீ கொடுத்திடவே கப சுரந்தான் தீரும் பாங்கான தாப சுரம் சொல்லக் கேளு
கூரே நீ சுரங்காயும் வாய் வெதும்பும் குணமாகக் கண் சிவக்கும் வேர்வையுண்டாம்
தீரே எப்போதும் தண்ணீர் தேடும் சிக்கி விடும் பயப்பட்டுச் சரித்திடாது
நேரே நீ வாய் பிலம்பும் மலமுஞ் சிக்கும் நிசமாகத் தாப சுரக் குணமி தென்னே.

12.

கஷாயம்.

என்னவே நற் கொழிஞ்சி கவிழ்தும்பை வேர் இசலான முத்தக் காசு ஆடு தீண்டாப்பாளையின் மூலம்
பண்ணவே அதிமதுரம் சுக்கு ஏலம் பாங்கான இலவங்கஞ் சித்தரத்தை நன்னவே சிறு தேக்கு திற்பிலியிரேடு
நலமாகச் சரி கூட்டிக் கஷாயஞ் செய்து
திண்ணவே கொடுத்து விடு மூன்று நாளும் சிறப்பாகத் தாப சுரம் தீருந் தானே.

தோஷ சுரக் குணம்.

13. தீருகின்ற தோஷ சுரம் வருமேயானல் சிறு பனியாய்ப் பனியடிக்கும் சிலுகுண்டாகும்
சாருகின்ற சந்தல் பேதி மிகவுண்டாகும் பயமல்லு மரைக் கண்விட்டுறங்கும் பாரு
கூருகின்ற அன்னந் தண்ணீர் வாய்கொட்டாது மூக் கேடாய்ப் பற் பரக்கும் கையில் தாங்காது
நேருகின்ற அவஷதங்கள் கொடுக்கும் போது நிசமாகச் சத்திக்கும் மருந்தேறுதே.

14.

கஷாயம்.

ஏறுது இன்னேய்க்கு கஷாயம் கேளு இசங்கன் வேர் நஞ்சறுத்தான் கொழிஞ்சி வேரும்
பாராது சிறு விளாசின்ன வேரும் பாஞ்சி வேர் தொடை வேர் முத்தக் காசும்
சீராக அதிமதுர மிலவங்கம் மல்லி சித்தரத்தை நெல் பொரியும் திற்பிலியிரேடு
ரோக சுவாசமின்றி அருந்தும் போது நில்லாது தோஷ சுரம்
நீங்கிப் போமே

ரெத்த சுரக் குணம்.

15. போமப்பா அஞ்சாரக் கனிச்சலுண்டாம் பொன்கிய நல வேர்வையுடன் தலை யெடாத
நாமப்பா விட்டு விட்டுச் சுரமுங் காயும் நலமாகப் பேதியிலே ரெத்தங் காணும்
தாமப்பா முகம் வாடிக் கண்ணுந் தாழ்ந்து தயவாக நாவுலர்ந்து நடுக்க முண்டாம்
ஆமப்பா வயிறகமே நோவுண்டாகும் அப்பவே தேகமது அனலு சொட்டாது.

கஷாயம்.

16. ஒட்டாது இதேனுக்கு கஷாயம் கேளு உத்தமனே வேப்பனெட்டு முருங்கைப் பூவும்
கிட்டாது அப்பட்டுக் குருந்திலேடு கிருபையுள்ள முத்தக் காசடா தோடை
தட்டாது சிவன் வேம்பு. சித்தரத்தை தயவாய் சிறு தேக்கு அமுக்கிருவும்
பட்டாத கிரிசரத்து ஓமம் மல்லி பாங்கான அதிமதுரம் வேதாரம்.

17. காரமுடனிவைகளெல்லாம் சரியாய்க் கூட்டி தயவாகக் கஷாய மிட்டுக் கொடுப்பாயால்
காரமுடன் ரெத்த சுரம் தீர்ந்து போகும் ஈக்க கண்ட ரோகமிது கருதிப் பாரு
பாரமுடனிந்த மொன்று சாதி முன்று பாங்கான அதிமதுர முத்தக் காசும்
காரமுடனே வகைப்பாய்க் கஷாயம் செய்து தயவாகக் கொடுத்திடவே சாந்தமாகும்.

கபசுரக் குணம்.

18. சாந்தமாம் கபசுரத்தின் குணத்தைக் கேளு தயவாகக் காசசலது மிகவுங் காணும்
சாந்தமாம் ஒன்றை விட்டு ஒரு நாள் வீங்கும் தயவாக ஒன்றை விட்டொரு நாள் வாடும்
சாந்தமாம் வாய்ப் புண்ணும் சுவாசமுட்டும் தயவாக அன்னமது பிறங் கொட்டாது
சாந்தமாம் வயிற் மந்தம் மலம் போகாது தயவாகக் கபசுரத்தின் குணமிதென்னே.

கஷாயம்.

19. குணமான நிம்பர நட்டு மருதம் பட்டை கவிழ்த்திரி லையுடனே தவரை தாளும்
குணமான சித்திரப் பால் கொடிப்பி வேரும் டைந்தவே சிறுவிலால் விஷ்ணுகிரந்தி
கணமான நன்னாரி முத்தக் காசு கருவான நெல்லி யென்ற வருத்தி தாளும்
பண்பான சீந்திலுடன் பேய்ப் புடலும் பாங்கான விஷ்ணுக்கிரேடும் கூட்டே.

20. கூட்டியே கோட்டமுடன் மாயக்காயம் கொத்த மல்லி வெந்தயமும் நறுக்கு மூலம்
ஆட்டியே அதிமதுரம் பற்படாகம் அக்கிறு சிறு தேக்கு ஓமந் தாளும்
நாட்டியே முன் மருந்து பிடி ஒன்றாக நலமாகக் கடை மருந்து கஞ்சி மூன்றும்
பூட்டியே கஷாய மிட்டு மூன்று நாளும் புகழதாகக் கொடுத்திடவே புனிதமாமே.

சகல சுரத்துக்கும் வாத ராட்சதக் குளிகை.

21. ஆமென்ற பிள்ளை சுரமனைத்துந் தீர அப்பனே வாத ராக்ஷதக் குளிகை கேளு
நாமென்ற பெருங்காயம் வெள்ளைப் பூண்டு நலமான அரியாது சுக்கு ஏலம்
போமென்ற கடுகரத்தை சிவதை ரோஜி புகழன வசம்புடனே கடுக்காய் தாளும்
தாமென்ற பூ நாகம் மிசிறு முட்டை தயவான நாகத்தின் கண்டந்தானே.

22. தானான வகை சரியாய் வாங்கி வந்து தயவாகப் பொடி செய்து கல்வத்திட்டு
மானான நொச்சிச் சாறு தன்னாலாட்டி மைந்தனே குன்றிமிடை குளிகை கட்டி
தேனான நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு சிறப்பான அனுப்பான மதனியீந்தால்
கோனான பிள்ளை சுரமனைத்தும் தீரும் குருவான பிந்து லேக் கர்ந்து பாரே.

சுரம் சகலத்துக்கும், கருணாந்த சஞ்சீவிக் குளிகை.

23. பாரே நீ பிள்ளை நோய் சுரங்கள் தீர பாடுகிறேன் கருணாந்த சஞ்சீவி தன்னை
ஏனே நீ பச்சைக் கர்ப்பூர மேலும் இலவங்கம் வால்மிளகு சிறு நாகப்பூ
கூறே நீ ரோகணியும் மாஞ்சி சுக்கு குணமான சீரகமும் நேர். வாளந்தான்
சீரே நீ வகை வகைக்குச் சரியாய்க் கூட்டி சிறப்பாக பொற்றலையின் சாற்றிலாட்டி

டி

24. ஆட்டியே ஒன்பது நாளரைத்துக் கொண்டு அப்பனே மிளகு தரம் குளிகை செய்து
மாட்டியே நிழலுலர்த்திச் செப்பில் வைத்து மைந்தனே தேன் முலைப் பாலிஞ்சிச் சாற்றில்
நீட்டியே ஈந்திடவே சுரங்களெய்கே நேரான நாவறச்சி மந்த மெங்கே
கூட்டியே கபமெங்கே அவறு மெங்கே ஐடி கெட்டு முடி விருந் தின்னுந் தானே.

25. பின்னை சகல சுரங்களும் ஆனந்தசஞ்சீவிக் குளிகை.

திண்மையுடன் பாலருக்கு இன்னமொன்று செப்புகிறேன் ஆனந்த சஞ்சீவி தன்னை
எண்ணமுடன் திரிகடுகு லிங்கம் காயம் என்ன சொல்வேன் வெண்காரம் நாவி சூதம்
பண்ணமுடன் வகை சரியாய்ச் சுத்தி செய்து பழச் சாற்றில் நால் சாமம் அரைத்துக் கொண்டு
வண்ணமுடன் மிளகு தரம் குளிகை செய்து வளமாக நிழலுலர்த்தி வைத்துக் கொள்ளே.

26. கொள்ளவே அநுபானந் தன்னில் தந்தால் குறுக் கட்ட சுரங்களெட்டும் ஓடி செட்டோடும்
விள்ளவே கஷாயங்கள் முன்னே சொன்னேன் அநுபானம் இஞ்சிச் சாறு தேன் முலைப் பால்
தள்ளவே கஷாயங்கள் தன்னில் தந்தால் தணியாத எச்சுரமும் தணிந்து போகும்
விள்ளவே அநுபானமறிந்த போது விக்கல் சுக்கல் கப முதலாய் விட்டுப் போமே.

அக்கர நிதானம்.

1. அய்யன் கரனடி தொழுது அக்கர நிதானந் தன்னை
மங்கையே பாலருக்கு வந்திடு மோரேழுக்கும்
சங்கையாய்க் குணமும் நல்ல சாத்தியம் அசாத்தியமும்
பங்கய மருந்துவுங் கூட பல பல குறிகை சொல்வாம்.

சிங்குவ அக்கரக் குணம்.

2. சிங்குவ அக்கரந்தான் செய் குணம் புகலக் கேளு
தங்கம் போல் மின்னுந் தேகம் தனைத்திடும் நாக்கும் தொண்டை
மங்கையர் முலை புண்ணு வாந்தியு மதிகருண்டாம்
வெங்கயப் பஞ்சு போலே வெளுத்திடும் நாவும் புண்ணும்.

3. புண்ணொரு தோஷந் தீரப் புஷ்பங்கள் பஞ்ச வாசம்
தெண்ணிய கன்னித் தேங்காய் செங்கருன் கோழி முட்டை
தண்ணிய மூல மந்திரம் சலமதி லோதிப் பின்னை
மண்ணிய தலையைச் சுத்தி மடைவரு கடியில் வையே.

மருந்து.

4. வைத்திடு சீனக்காரம் மாயக்காய் முலைப் பால் தன்னில்
சத்தமு வுரைத்து நல்கும் தாய் முலை பூசி யூட்ட
சித்தறப் புண்ணுந் தீரும் சிங்குவ அக்கரம் போம்
கொத்தறப் பொதிகை வாழும் குறுமுனியருளிச் செய்தார்.

எண்ணெய்.

5. திருகுக எண்ணை நாழி சீரகம் கார்கோல் சந்தம் பாரதி மதுரஞ்
சாதிபத்திரி கிராம்பு ஏலம் சேர் வகை சமனதாக
தெற்றிப்புச் சாறு நாழி
கூர்மையா யரைத்த தெல்லாம் குழம்பலை கலந்து காய்ச்சே.

6. காச்சு மெழுகு பதம் வடித்துக் காசினிடையாய் நாள் மூன்று
வாச்ச எண்ணை தான் கொடுப்பாய் வகையா யந்தி சந்தியுந்தான்
பாச்சு முழுகு வெந்நீரில் பரிவாய் ஒன்று விட்டொரு நாள்
தேச்சு முழுக அக்கரமும் தீருமுடனாம் நன்றாமே.

பில்லி அக்கரக் கூனம்.

7. காதம் கன்று முக மெங்கும் கதிக்க ஊருந் தான் சொறியும்
பார்த்து மடவார் கையதிலே பாலன் தரியாது துடி துடிக்கும்
மேதும் சிவந்து புண்ணுகி விரும்பிக் கொண்டாலுடன் தட்டும்
தாதும் பில்லியக் கரந் தீரத்தைக்க கிறிகையது கேளே.

8. கிறிகையது தான் பாணியிலே கெட்டும் பஞ்சாட்சர மொட்டி
அறியச் செவித்து முகத் தெறிந்து அறளிப் பூவு மீளநீரும்
கறியும் சோறும் பலங்களும் கருவாடுரட்டிக் கேத்திரியும்
அறியச் சுற்றிச் சுடு காட்டில் அகமே வைத்து முறிப்பதுவே.

கடூ ாயம்.

9. அதிக மதுர மீருள்ளி அமுகாம் சதிப் பத்திரியும்
முதியும் செம் பொன்னெரிஞ்சியுடன் மூக்கறச் சாற ணை நல்துளசி
பதியுந் தென்னங் குரும்பலுடன் பனையின் காரம் பாரிதிக்காய்
விதியின் படி அட கடூ ாயம் விட்டுக காய்ச்சி எட்டொன்றே.

10. எட்டொன்றுக்கி நாள் மூன்று யிசல் வாயாறு நேரமுந் தான்
மட்டாயருந்தப் பாலருக்கு வந்த வில்லியக் கரமும்
கட்டூடப் படுதலும் புன் பொடியும் கடிய பறங்கி சொறியூர்தல்
திட்டத்துடனே தீருமென்று திறமாயுரைத்தார் சேயிழையே.

இளைப் பக்கரம்.

11. இருமலுமிளைப்பி முண்டாயி இசைவுடன் நாவும் புத்தக் கரும்
கருகிடு மலமும் நீரும் காச்சலு மூக்கில் நீரும்
செருமலு முளியுமாறி திவவுடனே சொறியுண்டாகும்
அருமையாய்ப் பால் கொள்ளாது அக்கர மிளைப்பதாமே.

கிறிகை.

12. இளநீர் பாக்கு வெற்றிலையு மிசைந்த பழமும் பொரி வறையும்
கமுநீர் வெல்லம் புண்ணுக்கு களபந் தீபம் தூ பமுடன்
அமுநீர் மதுவம் பொதி சோறும் அஞ்சு வகையாம் பலகாரம்
மறையுந் தட்டுவ கோத்திரியும் மகவைச் சுற்றிக் கோத்திரியே.

அனிலென்னை.

13. தேங்காய் ரெண்டு பால் பிழிந்து திரிசாதி யதிமதுரமுடன்
பாங்காயேலஞ் சீரகமும் பகரு மக்கிரு யீருள்ளி
ஏங்கும் வகைக்கு ஓர் களஞ்சி ஈருள்ளிச் சாறு விட்டரைத்து
ஆங்காய்க் கலந்து தான் காய்ச்சு அனிலொன்றறுத்து உதிரம் விடே.

14. விட்டுத் தசைய மரிந்திட்டு விரைவாய்க் காய்ச்சி முதிர் பதத்தில் மட்டாய்
வடித்துக் கலசமடை மதலைக் கந்தி சந்தியுந் தான்
திட்டத்துடனே காசளவு திட்டமாய் மூன்று நாள் கொள்ள
தொட்ட இளைப்பு அக்கரமும் தூ ரவழி போம் தோகையுரே.

கடவாயக் கரம்.

15. கடவாய்கு வடும் புண்ணுகி கரு முள் போலே சரசரத்து
அடவாய் முளிக்கும் துடிதுடிக்கும் அன்னை முலைய மருந்தாது
தடமாய் வயிரம் கழிந்து வரும் த லையுங் கவத்து நீரொழும்
மடவார் கையில் தரியாது மைத்தர் கடவாயக் கரமே.

கிரிகை.

16. அக்கர மதுதான் தீர அறைகிறேன் கிரிகை கேரு
சர்க்கரை யடைக்காய் பூலம் சந்தனம் பஞ்சு புஷ்ப
மிக்க தொரு முந்தன் சோறு வெண் பொரி குட்டத்தடு
தக்க கோத்திரியிளுடு சத்தியில் வைக்க நன்றும்.

கஷாயம்.

17. நல்லதோர் வடலி மட்டை நல் சீரங்கிஷ்ண சீரம்
மல்லியுந் கெருடப் பச்சை மாயக்காய் சீனக் காரம்
தொல்லை தீர்பிலாம் பழுப்பு தொட்டர்க் கால் வாடி வேரும்
இல்லையில் கஷாயமிட்டு ஊட்டிடத் தீரும் பாரே.

எண்ணெய்.

18. தென்னையின் கனி தாளைந்து திருகியே பால் புழிந்து
இன்னும் செம்பருத்திப் பூவும் ஈருள்ளி தெற்றிப் பூவு
மன்னன் கற்பூர வள்ளி வகை வகை சாறு நாழி
சின்ன மாயக் காயேலம் சீரகம் கார்கோல் சந்தம்.

19. சந்தம் சித்தரத்தை மாஞ்சி சாதிக்காய் கிரும்பு பத்திரி
சிந்தையாய்க் கழஞ்சி வீதம் சேர்த்தரை கலந்து காய்ச்சி
உந்தவே வடித்துக் கொண்டு ஊட்டிடு மேலும் பூசு
விந்தையாய்க் கடவாயக் கரம் வேருடனிளகிப் போமே.

20

உதட்டக் கரம்.

கீழுமேலு தடுரெண்டும் கீறியே தடிப்புண்டாகி
நீருமே சக்கை முள்ப் போல் நின்று முழுன்றுக்கிலேசி
நாறுமே பாலன்னை நடுங்கிடும் பாலகன்றுன்
ஊறுமே முனக்க முண்டாம்உதட்டக் கரமி தென்றே.

கிரிகை.

21. அன்றிடுங் கறியுஞ் சோறும் அரளியின் பூவு மஞ்சள்
குன்றிடு மிளநீரப்பம் தூபமும் பொரியும் கூட்டி
குன்றிய குட்டத் தட்டு கோத்திரி யிரு வத்திலும்
கன்றிய மகவைச் சாற்றி கடுத்தமுச் சந்திவையே.

இலுக்கு நெய்.

22. வைத்திடு முழக்கு நெய்யில் மாய்க்காய் கழஞ்சி மூன்று
உற்றிடும் கதம்பைச் சாறு ஊட்டியே அரைத்து நன்றாய்
பற்றிய ஆதளம் பால் படி யரைக்கால் கலந்து
சுற்றியே வடித்துக் கொள்ள கண்டிலக் கரமும் போமே.

ரெத்த அக்கரம்.

23. நாக்கு வாய் தொண்டையெல்லாம் நையவே சிவந்து புண்ணாய்
நீக்கிடுங் காலடைத்து நீறியே நாற்ற முண்டாம்
தூக்கமு முலையுண்ணை சுரமுடன் ரெத்தக் சாயமா
மாக்கமு மயக்கம் ரெத்த மக்கரம் சாத்திய மென்னே.

24.

கிரிகை.

இன்னமும் பழம் பாலும் யிளநீரும் நெய்யும் சோறும்
கன்னலுந் தீப தூபம் களபமும் பொரியும் புஷ்பம்

தென்னையின் கனியு முட்டை செஞ்சாவல் மது புன்குக்கு
இன்னிய குட்டத் தட்டு கோத்திரி யிருபத்தஞ்சே,

25. அஞ்சடன் கெனபதியை ஆதரவாக வைத்து
மிஞ்சுரா மிச்சு சந்தம் மேவிய புகையுங் கட்டி
அஞ்சியே மூல மந்திரம் சொல்லியே திருநீறிட்டு
தஞ்சிய சலத்திலோதி சங்காளம் தீர்த்திடாயே.

26. சங்காள மெல்லாந் தீர்த்து தாய் பிள்ளை தலையைச் சுற்றி
அங்கவன் வடி கிழக்கா மதி சுடுகாடு தன்னில்
பொங்கிடு பெலியுஞ் செய்து புகள் தம்பல மோதித் ஊபி
இங்கிதமாகச் செய்ய இறையவனருளிச் செய்தார்.

இழுக்கு நெய்.

27. அத்திக்கா யபருத்திப் பிஞ்சு ஆவின் விழுது தெள்ளம் பூவு சுத
சுத்திய நவ்வல் பட்டை துளசி பச்சிச் சாறு தாளம்பால்
முத்துமே வகைக்குழக்கு முச் சாதி கெருடப் பச்சை
மத்திய ஏலஞ் சீரம் மாயக்காய் வசம்பு பச்சை.

28. பச்சையுங் களஞ்சோரொன்று பசுவின் நெய்யுரி தேங்கெண்ணை
மிச்சையா முழக்கிரூடு யிவை யெல்லா மொன்று சேர்த்து
மிச்சமாங் கலந்து காய்ச்சி மெழுகு பதம் வடித்துக கொண்டு
அச்சுதனருளால் ரெத்தம் அக்கரமகன்று போமே.

தொந்த-அக்கரம்.

29. வாய்க் குள்ளெங்கும் பூப்போலே வந்து படர்ந்து புண்ணுகி
நாக்கு மசையாதடல் காயும் நவ்வி முலையு முண்ணுது
மூக்கு மடைப்பது நீரொழுகு முள்ளப் போலே முகமெங்கும்
ஆககமென் குறையுங் குழல் மடவீர் அக்கரத் தொந்தக் குணமிதுவே.

30. கிறிகை.

கழுகன் குலையு மீனநீரும் கருப்புக் கட்டி புன்னுக்கும்
சமுக மடக்காய் வெள்ளிலேயும் சாம்பிராணி சாராயம்
குழுகத் தரியும் பொரி பழமும் குட்டத் தட்டும் கோத்திரியும்
அழுகப் புது நீர் மிகச் சொரிந்து ஆற்றங் கரையில் வைப்பதுவே.

31. இழுக்கு மருந்து:

தென்னையின் குரும்பை மேல் தோல் சீவியே யிடித்து நன்றும்
நன்மைச் சாறு புழிந்து நல்ல சர்க்கரை யு மிட்டு
வன்னியிட்டு ருக்கக் காய்ச்சி வனிகன் ஞாள் தவிக் கிண்டி
நன்மயக் குழம் போலே நாவதிற் தேய்க்கப் போமே.

கஷாயம்.

32. தெங்கு தாலத்தின் காரம் சீரக மீரவுள்ளி மங்கையே நெல்லி
மங்கையே நெல்லி முள்ளி மாயக்காய் சாத்திர பேதி
சங்கையாங் கஷாயமிட்டு தாய் முலைப் பாலுஞ் சேர்த்து
தொங்கலாய்க் கொள்ளும் போது தொந்த வக்கரமும் போமே.

நெய்:

33. சாற்றிடு முழக்கு நெய்யில் சாதிக்காய் கிராம்பு பத்திரி
மாற்றிடுஞ் சந்தனத் ஞாளி மாயக்காய் சமனதாக
கற்று தேனி கரும்பைச் சாறு ளம்ப விட்டகரத்துக் காய்ச்சி

ஆற்றியே வடித்து வூட்ட அக்கரந் தீர்ந்து போமே.

<u>எண்ணெய்</u>.

34. போக்கிடுங் கையான் சாறு பொடுதலை பருத்திச் சாறு
ஆக்கிடு மிஞ்சிச் சாறு அவரிச் சாறுள்ளிச் சாறு
பாக்கிலாது மூக்கு வீதம் பச்சையாந் தேங்காயெண்ணெ
வாக்கிலா நாழி சந்தம் வசம்பிரு சீரம் கார் கோல்.

35. கோலதி மதுரம் வெள்ளைக் குங்கிலிய மிாகரத்தை ஏலமும்
களஞ்சி வீதம் யிடித்தரை சாறு விட்டு
சாலவே யெரித்து நல்ல தரு பதம் வடித்துக் கொண்டு
மேலெங்கும் பூசி வென்னீர் விட்டொரு நாளை விட்டே.

<u>அக்கரம் சகலத்துக்கும் தயிலம்</u>.

36. அக்கரஞ் சகலத்துக்கு மறைகிறேன் தயிலமொன்று
தக்க வெள்ளறுகு சம்பாதாள பொன்னெரிஞ்சி கையான்
மிக்கவே நலை சுருள் வெற்றிலை நகரை தெற்றி
தொக்க செம்பருத்தி நீலி துளசி தென் குரும்பைச் சாறே.

37. குரும்பையின் சாறு நாழி கூறு மூன் சாற் வகைக்கு
திரும்பவே வகைக்குழக்கு சீரக மூன்று சந்தம்
விரும்பியே ரெண்டு திற்பிலி வெட்பாலை வசம்பு கார் கோல்
அரும்பியே மதிர மக்கிரு அசுவஞோர் கழஞ்சி வாங்கே.

38. வாங்கியே சாற்றுலாட்டி வளராவின் நெய் யேரண்டம்
தாங்காயே தேங்காயெண்ணை சமன் வகை படியில் பாதி
பாங்குடன் கலந்து காய்ச்சு பதம் வடி காசு வீதம்
நீங்கிடு மூன்று நாளும் நீட்டியே மேலும் பூசே.

39. பூசிடும் பாலகர் மேல் புதிய நீர் வேது விட்டு ஆ
ஆசுடன் நாலுக் கொன்று அவ்விதமாகும் போது
பேசிடும் மக்கரந்தான் பேரது ஏழும் தீரும்
வாசிடும் கரப்பன் தீரும் வது பிணியகலு மென்னே.

40. அகலுமே பலதா லாய்ந்து அவுடந்தத்தியற்க் கை தேர்ந்து
புகலுமே கை பாகங்கள் பொருந்தியே செய் பாகந் தான்
நகலுமே பெரியோர் தம்மை நலம் பெற <u>மனத்திலுள்ளி</u>
திகலுமே பரிகாரங்கள் செய்திடில் பிணி யொன்றில்லை.

41. இல்லையே தர்ம தானம் யியம்பிடும் தவங்கச் செய்தால்
தொல்லையும் விலையும் நோயும் தோடங்கும் தீர்ந்து போகும்
நல்வர் நனக்குச் செய்த நன்மை போல் சொன்ன யிந்த
வல்வக் கர நிதானம் வாழி வாழியே முற்றந் தானே.

<u>சிரப்பு பதினெட்டுக்கும் நிதானம்</u>.

1. ஆதியாம் கடவுள் பாதம் அடியினை தொழுது போற்றி
சோதியா முகவன் பாதம் தொழுதுமே பாலுக்காய்
நீதியாக் சிகப்பு ரோகம் தெரிட்ட விவரந் தானும்
வீதியா யுலகில் சொல்ல விமலனுர் காப்புத் தானே.

2. தந்தையுந் தாயும் கூடித் தழுவியே புணரும் நாளில்
வந்ததோர் வெட்டை மேகம் வரும் பெரும்பாடு சூலை

சிந்தையாம் தெற்பங் கூடில் சேர்ந்திடும் சிருமியாலும்
பிந்திடாச் சுரோணி தங்கள் பிலப்படாதழிக்குந் தானே.

3. தானென்று மிருகள் தப்பி செனித்திடும் பின்னைக்கே தான்
வானெனவ் கொண்ட ஞரு வங்கத்தினுள்ளே சேர்ந்து
பானெனும் மன்னந் தண்ணீர் பல பல தீற்றியாலும்
ஊனென முதரந் தன்னில் ஊற பல விறணங் கானே.

4. விறணத்தாலே மேகத்தாலும் வெட்டையாய்ச் சூட்டினாலும்
திறணமாஞ் சூலையாலும் செவித்த பின் போகத்தாலும்
விறணமாம் கெற்பமன்றி யிச்சமாய்ச் சோரை நீரு
வற்ஜமாங் கெற்ப ரோகம் மைந்தர்க்குச் சிகப்புமாமே.

5. ஊமடா கர்மத்தால தவர் செய்த தோஷத்தாலும்
தரமடா பற்றும் ரோகம் தரணியோர் தீற்பதேது
நாமடா சாத்தி மசாத்தியம் நலம் பெற அறிய வென்று
ஓமடா ஆகை மூவாறும் ஒன்றொன்றாய்ச் சொல்லுவேனே.

6. சொல்லும் நல் சிகப்பிலேது சுகர கொந்தளச் சிகப்பு
வல்லியே கருவலோடு வருங் கொடு சாதி தானும்
புல்லிய உளக்கல் சன்னி பொங்கிய பிறங்கால் ஏற்றம்
வல்லியே உள்ளுரோகம் வந்திடும் எரிச்சலாமே.

7. எரித்த சூரியனும் சக்கரம் இசைந்த சந்திரனும் மாறி
பொரித்த சூத்திர மூந் தோடை புகள் தலையாரத்
வரித்திடும் விகாதி யெல்லாம் வரும் பதினெட்டதாச்சு
நிரத்தியே பாலருக்கு நேர்ந்திடு மாதந் கேளே.

8. கேட்டிடும் பிறந்த நள் தான் கிருபையா யன்று தொட்டு
தாட்டிக மாசம் நாலு தன் னுளம் சிகப்பாய்த் தோன்றும்
வாட்டி சேர் கரப்பன் போக்கல் வந்திடும் பருவனெல்லாம்
நீட்டியே சிகப்பினாலே நேரிட்ட தென்று சொல்லே.

9. என்ற தோர் ரண்டு மட்டும் எழுந்த தோர் ரணங்களெல்லாம்
மன்றினிற் சிகப்பு ரோகம் வந்தித்த கால் தானென்று
நன்றென மருந்தினாலே நாட்டிடும் பிணிகள் தீரும்
கன்றிடமாசா மாசம் கடந்திட பலமாய்ச் செய்யே.

10. செய்ய நல் மூலியோடு சேர்ந்திடும் கஷாய மென்னே ~~வையவே~~
நையவே குழிகை நெய்யும் நயனமுடன் பலதுங் கண்டு
அய்ய ரென்றென நினைந்து அவுஷதம் செய்வீராகில்
வெய்யவே ரோகந் தீரும் விளம்பு வேனினங் கேளே.

11. கேள் பிணி பலங்கள் கண்டு கிளர் சிசு மாதர்க்குந் தான்
நாளுமே கொடுக்க வேணும் நலம் பெறக் கற்ம தர்மம்
நீளுமே தோஷந் தீர்ந்தால் நெடும் பிணிகடலே புக்கும்
வாளுமே நீக்கிச் செய்தால் வளவாம் புத்திரனே.

<u>சிகப்பின் குணம்.</u>

12. புத்திரன் பிறந்த போது பூனையின் குரலு போலே ~~சத்தமும்~~
சத்தமுங் கட்டிக் கொள்ளும் தவன் வயிறுள்ளே நோகும்
மூத்திர மலமுங் கட்டி முகமுங் கை கால் சிவக்கும்
மத்தமாய் வயிறு மூதும் வருங் குறிச் சிகப்பிதாமே.

இதற்கு மருந்து.

13. ஆமே குன்றியிலை மிருள்ளி அதிக துளசி வெற்றிலையுந்
தாவே சமனாய் யெடு சாறு தக்க பசுவின் ரோசினையை
நாமே கொஞ்சம் மயிலுரைத்து நலமாய் மூன்று நாளூட்ட
போமே சிகப்பு ரோகமது புதல்வர் தனை விட்டோடிடுமே.

கொந்தளச் சிகப்புக் குணம்.

14. காசி போல் சிவந்து வட்டம் கருமரைத் தவல்கள் போக்கி
பூசியே கழுத்தைக் கூடும் புண்ணைச் சிவந்து போகும்
மாசியே வெதும்புந் தேகம் வாய் முலை நவ்விடாது
கூசியே நயனமூடும் கொந்தளச்சிகப்பிதாமே..

இதற்கு மருந்து.

15. ஆமிரு சீரன் கார்கோல் அதிமதுரமாயக் காயும்
தாமிரு துளசீருள்ளி நாரும் செம் பொனெரிஞ்சி வேரும்
வாமிது வொரு களஞ்சி வகுந் திரி சாதி காலும்
போமிரு நாழி நீரில் பகம் பெற எட்டொன்றுக்கே.

16. ஆகசியே சங்களவு அதிக ரோசினை யுரைத்து
தாக்கு நாளந்தி சந்தி தானே முறையுடன் பாலனுக்கு
போகும் சிகப்பு கரப்பனொடு பொக்களூர்தல் காந்தலுடன்
நீக்கு மிதுதான் கண்டறிந்து நேரே யுரைத்தாரேந்திழையே.

விகாரச் சிகப்பின் குணம்.

17. அலறியே முலையுண்ணாது அருங் குரல் கம்மலாகிப்
பலமுடன் காயும் மூர்ச்சை பகர் விழிதிறந்திடாது
நல வயிறாதிக் கொள்ளும் நாவது வற்ண்டு போகும்
பிலமுற மலமும நீரும் பேர்ந்திடா தடைக்குந் தானே.

18. அடைத்து ஜதி வலியுடனே அமராத முதுகை காலும் இசை
பெருத்து தளர்ந்து அசதியுடன் போத மன்றி நாவறளும் ப
படைத்த விகாரச் சிகப்பிதுவே பரிகாரங்கள் செய்தாலும்
உடைத்த பரனார் தன்னுனே ஒரு நாளுந் தான் பிழையாதே.

உடலாதி சிகப்பின் குணம்.

19. பிள்ளை பிறந்த உடன் வயிறு பெருக்க ஜதி மலங் கட்டும்
உள்ள நீரு மிறங்காமல் ஓங்காரித்துக் கண் மூடி
தள்ளை முலையு முண்ணாது தனுகாப்பச்சை நரம்புனே
கள்ள மறவே மருந்து செய்யில் காணதோடிப் போய் விடுமே.

இதற்கு மருந்து.

20. விடுமே கருஞ் சூரைப் பட்டை மேவி முலைப் பால் தனிலுரைத்து
திடமே ரோசினை யிதில் கொஞ்சம் சேர்த்திருள்ளியின் சாறு
நடமே துளசிச் சாறதுவும் நன்னாய் கொஞ்சமதில் விட்டு
கொடுமே சிகப்பு ரோக மெல்லாம் குடிதான் வீழ்ந்து போம் பாரே.

கருஞ்சாதி சிகப்புக் குணம்.

21. காலுங் கையும் பொடு பொருத்து கண்ணும் மூடித் தானமுது
மேலுங் காசு போல் சிவநது செழும்பி நீரு மலஞ்சிக்கி
பாலுங் குடியாதடி வயிறு பாறை போலவே கனத்து

தோஷமுரிய மரிசிரங்கு தோன்றுஞ் சூரிய சிகப்பிதுவே.

<u>இதுக்கு மருந்து.</u>

22. கழுதைப் பாலிலொரு கள்ளி கடிய ஞெண் ரெத்த மிடு
பழந்தாய் மூன்று நாளூட்டப் பத்திய விவரம் சொல்லுகிறேன்
முரு முதலியிலை வறுத்தச சாத மல்லாது
குழலே யொன்று மாகாது குளிப்பது மூன்று நாள் சென்றே.

<u>சந்திர சிகப்புக் குணம்.</u>

23. பிறந்த பின்னையுடல் பருத்து பின்னே யுலர்ந்து தான் வற்றும் குறைந்தே
குறைந்தே வயிறு தானு தம் குழலி வயிறுஞ் செமியாது
சிறந்த கையுங் காலொடுவாகி சிரவர் மலமும் போகாது
உறைந்தே சிகப்பின் குணமறிந்து உலகில் மருந்து செய்வீரே.

<u>இதுக்கு மருந்து.</u>

24. செம்பொன்னெரிஞ்சி நல் துளசி சிறக் கற்றலிப் புளிச் சாறு
நம்பிருள்ளி வெற்றிலையும் நககுராயிலையின் சாறுடனே
உன்பீர் ரோசினை தான் கூட்டி யூட்டு மூன்று நாள் தானும்
சிம்பா தாறு நேர மெண்ணை தேய்க்கப் போகும் திணையிதே.

<u>சந்திர சிகப்பு.</u>

25. சந்திரன் நிறம் போல் பின்னை சரீரமு நடுங்கி வந்தி
தந்திர வயிறு நொந்து தான் பொறுத்திடவு மாட்டா
புந்தியும் நாவும் வெந்து புண்ணென நோவு கண்டாய்
பிந்தியே குணங்கள் வேறே பிறந்திடல் தோணு மாமே.

<u>மூக்குட்டெண்ணை.</u>

26. ஆவின் கிருதம் நல்லெண்ணை ஆமணக்கின் எண்ணையொடு
மேவு மிசங்கிலைச் சாறு மிளகு சுக்கு திற்பிலியும்
தாவி யரைத்தெல்லாம் கலந்து தக்க சூரியன் தனில் வைத்து
நாவுகின்ற செம்முள்ளி நல்ல கிரந்தி நாயகமே.

27. நாககமுடனே பிலை யெல்லாம் நயமாய் நீருதனிலிட்டுக்
காய்சிக் குறுக்கி யன்னீரில் கருதிக் குளிந்து வரும் போது
வாச்ச உடலுந் தான் தெளியு மற்றும் பல நோயுந் தீரும்
வீச்சமுடனே சொன்னது தான் விழலாய்ப் பத்தியமில்லாதே.

<u>சன்னிச் சிகப்புக் குணம்.</u>

28. கண்டத் சீறி தலைக் கனமும் கையுங் காலுமே யசைந்து
உண்ட பாலும் நாசி வழி ஓடி வரும் பின்னுண்டு
தொண்டை கறள்டு கபம் வந்து துரப்பும் விலாவுந் தானெடுத்து
விண்ட குணங்களடிக்கடி தான் வெவ்வேறுகச் சார்ந்திடுமே.

29. சாருங் கண்ணும் மூளி மாறி தக்க நகமும் கறுத்திருண்டு
பாரும் கை காலமுத் தேறும் பத்து நகமுங் கன்றுடனே
தாரா விஷம் போலே கறுத்து வரும் தீக்கும் சன்னிச் சிகப்பிது தான்
ஆராலும் கட்டிடுமோ அரனுரைத்த பிழையாதே.

30. <u>அக்கினி சிகப்புக் குணம்.</u>

எரிவுறக் காய்ந்து தேகமிருமலுங் காச்சலுண்டாய் பரிவுற
[illegible]

அரிய நாவறண்டு தாகம் அலைகை தங்கிடாது;
பிரியும் நாளெட்டுக் குள்ளே பேர்ந்திடுஞ் சீவன் தானே.

உள்ரு_ரோக_சிகப்புக்_குணம்.

31. முள்ளுப் போல் வாயில் வந்து மூளைத்து மேல் சிவந்து காலும்
கள்ளுப் போல் நீரும் போகும் களிச்சது மிரைச்சலுண்டாம்
துள்ளலும் பனியும் போலே துடித்து வாய் நீருமாகி
உள்ளமும் வெந்து நீறும் ஒரு போது மீளா தென்னே.

உளைக்கல்_சிகப்புக்_குணம்.

32. சிகப்புமேல் கண்டிடாது கண்டதும் தெரிடாது
..... பகர்ந்திடு முளைக்கலான பாலகர் சிகப்பிதாமே.

எண்ணை.

33. ஓரிலைத் தாமரை பொன்னெரிஞ்சி உற்ற மூக்கறச் சாறளையும்
பாரிலே கொற்முனிருள்ளி பகர் முத்தெருக்கின் செவியுடன்
வாரு மிவையின் தன் சாறு வளருமே எண்ணெய் சமன்
சேரு மஞ்சளைப் பிசியுடன் சிறக்க காய்ச்சி வடித்திடுமே.

34. வடித்து மைந்தருள் கொடுத்து மாதர் மேலுந் தான் பூசு
தொடுத்த பத்தியம் வெகு கடினம் சூதகத்துடனே காத்துவரில்
பிடித்த சிகப்பு பதினெட்டும் பின்னும் பல நோயுள்ள தெல்லாம்
திருகைத்துடனே தான் தீரும் சேரவுரைத்தார் செந்திருவே.

கருஞ்சாதி_சிகப்புக்_குணம்.

